DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.3/2025

எதிர் மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி

| | |
|---|---|
| Name | சித்ரா |
| Father's Name | த/பெ. மாரிபாலகிருஷ்ணன் |
| Village | திருநெல்வேலி |
| Taluk | |
| Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

**முதல் விசாரணை :–**

நான் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகர் வழங்கிய அனுமதி கடிதம் **சா.சா.ஆ.1.** TN 69 BQ 2745 என்ற TVS Scooty Pep Plus வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறிக்கை தாக்கல் செய்கிளேன். அது **சா.சா.ஆ.2 வரிசை.** TN 69 AC 3555 என்ற Oil Tank கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறிக்கை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3 வரிசை.** சா.சா.ஆ.3 ல் சம்பந்தப்பட்ட வாகனத்தின் முன் வலதுபுற சைகை விளக்கு சேதமடைந்ததாக சொல்லப்பட்டுள்ளது. வேறு சேதாரங்கள் இல்லை. சா.சா.ஆ.2 ல் சம்பந்தப்பட்ட வாகனத்தின் முன் இடதுபுற Panel Body,

முன்புற முகப்பு விளக்கு, Speedameter and Key Assembly, Handle Bar both side bent, பின்புற Panel Body, பின்புற Break Light, Both side Indicator Assembly, பின்புற Mudguard, Registration Number Plate Assembly, Shock Absorb bent சேதமடைந்ததாக சொல்லப்பட்டுள்ளது. வேறு சேதாரங்கள் இல்லை.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

பொதுவாக ஒரு கனரக வாகனம் ஒரு இருசக்கர வாகனத்தில் மோதினால் இருசக்கர வாகனத்திற்குதான் சேதாரம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். விபத்து சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் இயந்திர கோளாறினால் விபத்து ஏற்பட்டதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

**ஒம்/–R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**